83

நடராஜன் துணை.

சங்கீத வித்வான் S. V. சுப்பைய பாகவதர், K. B. சுந்த ராம்பாள், S. G. கிட்டப்பா முதலியவர்கள் பாடிவரும்

கிராமபோன்

இரத்தினாமிர்தம்

(மூன்றாம் பாகம்)

சிதம்பரம், புத்தகவியாபாரம்,

G. இராமாநுஜம் செட்டியார்

ர்கள் வெளியிட்டது.

1930 [விலை அணா 2

ம், 176, தங்கசாலைத் தெரு, சென்னை.

NR21
N30·3
186823

உ

கணபதி துணை

கிராமபோன் இரத்தனாம்ருதம்

(3-வது பாகம்)

சங்கீத வித்வான்

S. V. சுப்பைய பாகவதர்

பாடிய பாடல்கள்.

இராமாயணக் கீர்த்தனை.

சென்னை T. S. வடிவேலுப்பிள்ளை பாடியது.

இராகம்-காம்போதி, தாளம்-ஆதி

பல்லவி.

விபூஷணா மிகபுகழ் சுகுணா வி

அநுபல்லவி.

48 ஆதரிப்பேன் அஞ்சாதே! அஞ்சாதே!!
ஆருக்கு நீ என் அருகினில் வாவா வி

சரணம்

சீதைக்குன் மகள் திரிச்சடையாலே
சிந்தையின் துயரத்தை தேற்றினதாலே
பூதல மீதினில் உந்தனைப்போலே
புண்ணிய ருண்டோ சொல்லினி மேலே வி

கத்தையில் முத்து பிறந்தது போலே
இராக்ஷஸ குலத்தினில் நீ பிறந்தாயே
உத்தமா எனை நீ நாடி வந்தாயே
உலகினில் எனக்கு துணைவனும் நீயே வி

தமிழ்நாடு ... சென்னை 600 008

இன்னமும் உன்மனம் சஞ்சலம் ஏனோ
எவ்வேளையும் ...ன் கைவிடுவேனோ
... துயரப்படாதே
... ...வணனால் நீ வாடாதே ... நீ

1907
784·0954

தணிகைமலை செல்வோம் என்ற மெட்டு
இராகம்-சிந்து பைரவி, தாளம்-ரூபகம்

பல்லவி

49 கழுகுமலைக்கு நாம் நேராய் கந்தனை
காணப்போவோம் எல்லாம் வாருங்கள் சீராய்நேராய் க

அநுபல்லவி

கனிந்து கடம்பன் வாழ்கிலை இடந்தெரிந்ததோ கோராய்
துஷ்டர்களின் குற்றமொடு விட்டகுறை வெட்டவெளி க
முனைந்து விரைவாய் செல்வோம்
தினந்தினந்தனிலு நாமே க

விருப்புடன் மகிழ்ந்து புகழ்ந்து திருப்புகழ்
சந்தம் இலங்கும் துலங்கும் க

சரணம்.

எட்டுதிசைபுகழ் பெற்றிடுங்கண்ணியன்
இஷ்டமானவருக்கே ரூபலாவண்யன்
எட்டியேகாபுரம் வாழ்நவரே கண்ணியன்
வட்டவெங்கடேசன் துதிக்கும் சுப்ரமண்யன்

காலடிபணிந்திடுங்காமி கவி. எம், ஆர். கோவிந்தசாமி
தாளடிதுதிபெண்கள் நேமி தாவியே தொழுகந்தசாமி
சூரர்களை வேறரவே
வீரமொடு நின்றதைதந்த க

ஞானம்பாள் அல்லது கற்புள்ள தாசிப்பெண்
ஓர் இனிய தமிழ்நாவல் விலை அணா 5.

K. B சுந்தராம்பாள் பாடி வருவது.

இராகம் - சாஹனு. தாளம் - ஆதி.

பல்லவி.

50 கையில்பணமில்லாமல் கலவிசெய்யவந்திரோ
கடனுனல் எழுந்திரும் சாமீ (கை)

அநுபல்லவி

ஐயரே தென்பழனி அருமைமக்குமரேசரே
அம்மான் மகளானுலும் சும்மாவரப்போராளோ (கை)

சரணம்

ஆசை யிருந்காலென்ன காசைவிடவும்போமோ
அழகுமாப்பிள்ளையானுல் அளவுக்குச் செல்லலாமோ
வேசைபர்க்குக் காசில்லாமல் வேறே பிரியமுண்டோ
வீணுய் வந்தால்நீரெங்கள் வீட்டுக்கிழவிவைவாள் (கை)

தெந்தினப் பாட்டுப்பாடி திருநாமமிட வந்தீர்
சிறித்து சிறித்து யென்னை மறுத்துகூரிட வந்தீர்
அந்தக்காரணத்தாலென் மனதை மயக்கவந்தீர்
ஆரியக் கூத்தாடினுலும் காரியத்தைக் கைவிடலாமோ (கை)

S. R. கமலம் பாடியது.

இராகம - ஆரபி. தாளம் - ஆதி.

சந்திரமதி

பல்லவி.

51 யார் போய் சொல்லுவார் இந்தவேளை
நாதனுக்கீ காடி யார

சரணம்.

பாவிச் சந்திரமதி பழிகாரி பெற்றபாலன்
பாம்புக் கடித்திறந்து பரமபதம் சேர்ந்தானென்று யா
பார்ப்பானுக்கடிமையாகிப் பரதேசி போலநாங்கள்
பதைத்துபதைத்துவாடிபலதொண்டுசெய்தோமென்று யா

அவ்வனின் கட்டளைப்போல அடவிசென்றமே பாலன்
அரவங்கடித்திறந்துபோழ்ந்தானுயிர் சாய்ந்தானென்று யா
பேய்கள் கரிபுலிகள் பெருத்த வனந்தனிலே
சாவிச்சந்திரமதி பிள்ளையை இழந்தாளென்று யா

உறையூர் T. M. காதர்பாஷா பாடி வருவது.

இராகம் மால்கோஷ, தாளம்-ஆதி

பல்லவி.

52 வாவா கார்த்திகா செழும்
மரகத மயில்மிசை தருண பெனதமுனம் வா

அநுபல்லவி.

புவியிலிவ் வாழ்வு பொய்யன்றோ தாழ்வு
புனிதப்பெற பூஜித்தேன் புகழ் கடம்பனே
மகிழ் திடந்தருள் வா

சரணம்

தஞ்சமுன் பாதம் சாற்றிடும் போதம்
தண்டமிழ்ப் பதமே சுந்தரன் ஸ்தாபன
பக்திச் சித்தச் சோகமகற்ற விச்சுபதினத்தில் வா

S V. சுப்பையா பாகவதர் பாடி வருவது

இராகம்-இந்துஸ்தான், தாளம்-ஆதி

பல்லவி.

53 ராம பஜன ஹோதியா கமலமுகே
ராம பஜன ஹோதியா

அநுபல்லவி.

ராமலக்ஷ்மண பரதசத்ருக்கன
ராமகாமகரோ கமலமுகே வா

சரணம்.

கௌசல் யாகே புத்ர சமேதா
தசரத ஜீகே லால கமலமுகே ரா

லகசௌம் ராசி	பேரே பிகா	
சுந்தா நரதம பாயா	கமலமுகே	ஈஉ
காயபீயா	சுகஸேஸேயா	
ஸஹநஜீமா தனுகோயா	கமலமுகே	ஈஉ
ஜாமுகனிவஸிதின	ராமகாமமனஹீ	
வாஹது முகாசினிகியா	கமலமுகே	ஈஉ
ஸஹநகபீரா	சுரேணுபயிசாஜ	
ஆபாவை சாகயா	கமலமுகே	ஈஉ

இராகம் வசந்தா.

54 இன்னமுஞ் சொல்லவோ உன் மனங் கல்லோ
இரும்போ பெரும் பாரையோ
இருசெவியு மந்தமோ கேளாது அந்தமோ
இது உனக்கழகு தானோ
என்னென்ன மோகமோ இதுவென்ன சோபமோ
இதுவேயுன் செய்கை தானோ
இருபிள்ளை தாபமோ யார்மீது கோபமோ
ஆனாலும் நான் விடுவேனோ
உன்னைவிட் டெங்குசென்றாலும் விழலாவனான்
உனையடுத்துங் கெடுவேனோ
ஓஹோவிது உன்குற்ற மென்குற்ற மொன்றுமிலை
யுற்றுபார் பெற்றவையா
என்குற்றமாயினும் உன் குற்றமாயினும்
இனியருளளிக்க நினைவாய்
ஈசனே சிவகாமி நேசனே யென்னையீன்ற
தில்லைவாழ் நடராஜனே.

பெற்றான் சாம்பனார் சரித்திரம் விலை அணா. 12

ஸ்ரீ அம்பாள் துதி—திருப்புகழ்

தமிழ் நாவலர்

S. K. கோவிந்தசாமி பிள்ளை பாடியது.

மருவே சழித்தகுழளாள் என்றமெட்டு

55 மதியே சிறக்க நலமே பெருக்க
வருவாய் மனத்தி ... லுறவாகி
வளமே மிகுத்து மனமே பொறுத்து
மகிழாய் எனக்கு ... மறவாமல்
விதியா லலைத்து தலமே மிதித்து
வினையா லழுந்துத் ... திரியாமல்
கிருபா தகத்தை யருளா லகற்ற
மிவிரா புவக்க ... வருவாயோ
கதியே யளித்து நலமேவி னிற்க
கலையே வகுத்த ... பெருவாழ்வே
கனகாம் புஜத்தி கருணை சமுத்ர
கணமே மிகுத்த ... திரிசூலி
பதியா முனக்கு கழுகே மதித்த
பரமே ஜெனித்த ... தலமாமே
பதமே யனத்தி விதமா பிறுத்த
பதுமா சனைத்தி ... னருளாலே.

செந்தாழப்பூ வுந்தேனுங்கமழ் என்றமெட்டு.

56 தந்தா ளூர்ந்தா ளெந்தாய் சுந்தரி!
தயவு வைத்தா ளென்னையே!
சாரு முறைப்படியே ... நேருமுறைப்படியே
தழைத்து நல்வினை ... ஒழித்து வல்வினை
செழிக்கப் பல்வரம் ... பிழைக்க நல்வரம் (தந்).
சந்தோ ஷந்தான் வந்தே னம்பிகை!
சார்ந்து முன்னடி கௌரியே!

சாந்த குணமுடனே ஏந்து மணமுடனே
தருக்கு மூந்தனே பொருந்த வந்தனம்
பெருக்க தந்தனம் திருப்பதந் தந்து (தந்)

உத்தே சித்தே னித்தே சத்தே!
உத்தமி யுன துரிமையே!

உந்த னிதப்படியே யெந்தன் பதப்படியே
உந்தனே நாடியே சிந்திதைப் பாடியே
வந்துனைத் தேடியே சிந்தனே கூடியே (தந்)
கண்டே னுண்டே னின்றே னின்று!
காண உந்தனின் பெருமை!

காசினி மீதி லுன்னே பேசிடும் நீதிதன்னை
கனியாய்க் கண்டனன் இனிதா யுண்டனன்
நனியாய் விண்டனன் புனிதா யென்றனன் (தந்)

T. முருகேச நாயகர் பாடியது.

பல்லவி.

57 திரிலோகமும் புகழும் சுந்தர
தீரவீர சூரனே

அநுபல்லவி.

இன்னாட்டுக் கதிகாரன்
விண்ணாட்டுக் கதிசூரன
நன்னைட்டுக்கு மதிகாரன்
நாகரீக சம்போகன் யானே தி

தரணிபுகழ் கெப்பீரன்
அரிவையர்க்கிசைந்த மாரன்
பரிபூரண சுக வுதாரன்
பாதமீதில் ஓதம்வேதன் நானே தி

ஸ்ரீமான் ச. சு. சங்கரலிங்கக் கவிராயர் பாடியது

ஷண்முகா ஏழையென்மேல் தயவில்லையா என்ற மெட்டு

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்

58 பக்திக்கோர் வித்வஞான பழனியப்பா
பாலகன்மீது வர்மமேது புகல்வாயெனப்பா ப

அநுபல்லவி சந்தத் தொடர்.

பற்றும் பவ வினைபது
முற்றும் பொடிபடவரு பழனியப்பா ப

பளபளவென வொளிதரு
மயின்மிசை நடமிடவரு பழனியப்பா ப

பகருணகிரியின் பட்சத்தே
திருப்புகழை கற்பித்தே
விருப்பமொடு ரட்சித்தே
மகத்வமிகு பழனியப்பா ப

சரணம்

தித்திக்கும் பஞ்சாமிர்தமே
தேனும் பாலும் பாகுஞ்சேரும் திருவடிக்கனுதினமே
தியான விஷ்டை தானளித்து
ஆணவத்தை யேவிலக்கிடாய்
சிவசமயத்தொளிர் முருகனெனப்புகழ் தேசிகனே
சித்திக்கும் பிரம்மானந்தமே
செந்திப்பதிவரு செல்லப்பா சங்கசெலிங்கஞ்
சந்தத்தமிழது சொல்லப்பா சந்ததமெந்தன்
சொந்தத்துணையென யில்லப்பா சங்கமுழங்கும் ப

இராமலிங்க சுவாமிகள் திருவருட்பா

59 வாழையடி வாழையென வந்ததிருக்கூட்ட மரபினில்
யானொருவனன்றோ வகையறியேனிந்த
வேழைபாடும்பாடனக்கு திருவுளச் சம்மதமோ
விதிதருமோ விதுமுறையோ விது தருமந்தானோ

மாழைமணிப் பொதுநடஞ்செய் வள்ளலார் யானுனக்கு
மகனலனோ நீயெனக்கு வாய்த்த தந்தையலையோ
கோழையுல குயிர்த்துயா மினிப்பொறுக்க மாட்டேன்
கொடுத்தருளு நின்னருளொளியைக்கொடுத்தருளிப்பொழு

ஸ்ரீமான் ச சு. சங்காலிங்கக் கவிராயர் பாடியது

என்ன கேள்விமுறை என்றமெட்டு

பல்லவி.

60 சொல்லுவாய் மயிலே சொல்லச்
சொன்னேனென்றே முருகனிடம் சொ

அனுபல்லவி.

எல்லாமுன்செய லல்லால்வேறில்லை
நல்லாய் கேளெனவே சொ

சரணம்.

அல்லும்பகலும் முருகன் துணையென்று
அன்புதரும்பு மானந்தத்தமிழ்கொண்டு
அத்தா உன்னைத் துதித்தா
னுண்மைப்ரசித்தா கேளெனவே சொ

இன்னுமொருதரம் அன்னைவயிற்றினி
லென்னைப்புகுத்திடா தின்னல்விலக்கிடு
மென்றே பலமுறைசொல்லுகின்றே
னென வருகினில் நின்றே குருபரனிடம் சொ

வாக்குபலிக்கவும் யோக்கியனுக்கவும
பாக்கியந்தந்தென்னைக் காத்துரக்ஷிக்கவும்
வசாரயினி வொருவரந் தாரா
எனமுருகனி நேராய் முறையிடுமிதை சொ

தங்கவடிவேலன் தந்தத்திருவாக்கு
பங்கமாகாதெந்தன் பங்கில் தங்குமென
சங்கம் புகழும்பிர சங்கத் தரு
சங்கரலிங்கன் சொலுமனுவிதை சொ

ஸ்ரீமான் ச. சு. சங்கரலிங்கக் கவிராயர் பாடியது.

வருவாய் மயிலேறி என்றமெட்டு

61 மயில்வாகனமேறி வா முருகா மயி

அநுபல்லவி மகுடத் தொடர்ச்சி

மாசிலாத தேசிலாவு மயி
மருத்துவமிலகு ஜெகத்தில் நடமிடு மயி
மதுரிதமிலகிய வரமருள் செயவொரு மயி
வாதுருது பேதென் மீதுநீதிபோத வேதநாயகனே மயி
அந்தின்பந்தர் தெந்தனையாண்டிட மயி

அநுபல்லவி

குயில்மொழி உமையாள் குமரஷண்முகனே
கொஞ்சம்தயவுசெய்வாய் தஞ்சம்தஞ்சம்நானுந்தன் மயி

சரணம்

அருணகிரி பரவும் ஆபத் சகாயனே
அடியேனெனக்கோர்வரம் அருள்கார்த்திகேயனே
சரவண பவசிவ சமரபுரீசனே
சங்கரலிங்கன்பங்கில் தங்கும் முருகேசனே மயி

---

62 திருச்சிற்றம்பலம்.

படமுடியா தினித்துயரம் படமுடியா தரசே!
பட்டதெல்லாம் போதுமிந்தப் பயந்தீர்த்திப் பொழுதென்
உடலுயிரா தியவெல்லாம் நீயெடுத்துக் கொண்டுன்
உடலுயிரா தியவெல்லா முவந்தெனக்கே யளிப்பாய்

கடலூர் சிற்றம்பலத்தே வாழ்வாயென் கண்ணுன்
மணியே! என் குருமணியே! மாணிக்க மணியே
நடனசிகா மணியே! யென் குருமணியே யென் நவமணியே
ஞான நன்மணியே பொன் மணியே! நடராஜ மணியே!

M. பக்கிரிசாமி முதலியார் பாடி வருவது.
பூரணச்சந்திர பிம்பமோ என்றமெட்டில் பின்னடி வேறு
பழூன் தரு

63 கத்திரிக்காய் கூடை கொண்டாடி காசுக்
கொன்னூறெண்டுமூணு நாலஞ்சாறே ழெட்டொம்பது பத்து
பத்துப் பத்தும்இருபது இருபதும்பத்தும்முப்பது
முப்பதும்பத்தும்நாற்பது நாற்பதும்பத்தும்ஐம்பது
ஐம்பதுபத்தும்அறுபது அறுபதும்பத்தும்எழுபது
எழுபதும்பத்தும்எண்பது எண்பதும்பத்துத்தொன்னூறு
நூறு க

நூறும் நூறும்இரநூறு இரநூறும் நூறும்மூந்நூறு
மூந்நூறும் நூறும்நானூறு நானூறும் நூறும்ஐந்நூறு
ஐந்நூறும்நூறும்அறுநூறு அறுநூறும்நூறும்எழுநூறு
எழுநூறும்நூறும்எண்ணூறுஎண்ணூறுநூறும்தொளாயிர
ஆயிரம் க

ஆயிரம் ரெண்டாயிரம் மூவாயிரம் நாலாயிரம்
ஐயாயிரம் ஆறுயிரம் எழாயிரம் எட்டாயிரம்
ஒன்பதாயிரம் பத்தாயிரம் லக்ஷம் பத்துலக்ஷம்
கோடி கோடி அந்தகோடியிலோர்மாடி

அந்தமாடிமீது ஒருலேடி அலளும் காளும்கூடி
சரசசல்லாபமாடி கொண்டாடி கின்ருடி பதம்பாடி
ததிங்கிணத்தோம் ததிங்கிணத்தோம் ததிங்கிணத்தோம் க

ஆர்மோனியம் T. M. காதர்பாக்ஷா பாடியது.

பல்லவி.

64 மேரே மவுலா புலாலே மதினமுஜே
ஹமேஹ ஜாத்தோதே கான ஜீண முஜே மே

அநுபல்லவி

ஹாவ்விலே வாலே செய்கையை மை ஹத்தமல் தாரஹையா
ஜான் தடப்திராஹிபி—அவர்—தில்மச்சில் தாரஹையா மே

பல்லவி எடுப்பு

லீயா சாத்துண அப்பனே கிஸீனே முஜே மே

அநுபல்லவி.

தேஹியேகின் பத்மே லீகி ஹைஸ்லிபாரத்யானதி
தேஹியேரோஸ்யேப் பேஹஸாத் ஹிம்புலாத்தேயாணஹீ
எஹிருஸ்ஹை பாரா மதினமுஜே மே
ஐ அஜல் மத்ஜான்லே எ ஜாம்படி முஷ்கில்மே ஹை
ஜானே தூம்ரோஸஷேப்யேவ அம்மான்மேமாதில்தேஹ
கோயிசவாதின்தே ஹாரே ஜீனேமுஜே மே
ஹின் தஸ்ஸேபா சாஹ்ஹீயோ கௌசர் புலாலிஜேமுஜே
எக்பியாலா ஆபே சமசம் காயிலாதிஜே முஜே
படேஹிஜாதே ஹாசுயே பீனேமுஜே மே
யாமுகமத் முஸ்தபாதஸ கின்னத்தாகிஜே மேரி
ஆரதிஷ்ஷே புர்கத்மே ஜல்நாமுகேபாலிஜே மேரி
வக்கே மவுத்ததே மஹீன மதினமுஜே மே
ஸிக்கரத்துணியா சைக்கடோ யேக்கஸாத்தே நிதாணஹே
மை முஸாபிர் ஹீம் அக்காலே அம்மதர் தக்கா ஹை
கோயிராஹப் மேலுட்னே ஜீணதிஜே மே

நாதந்தி நாதந்தி என்ற மெட்டு பின் அடுக்கு

65 கையாலே ஆகாத காமாட்டிநீயொரு
பைசா கொடுத்ததுண்டா நல்ல புடவை
நைசா எடுத்ததுண்டா
போட வெற்றிலேயுண்டா நத்துமூக்குத்தியுண்டா
வெத்துராக்களியுண்டா முத்து கொப்புத்தானுண்டா
ஒரு லவுக்கை போட் டாயா புலாக்கு
கம்மல் போட் டாயா நல்ல
சொத்தை போட் டாயா ரொக்கம்
சேர்ந்துவைத் தாயா அட
சிச்சிசிச்சிசிச்சி போபோபோ நீயும் ஒரு மனுஷனு
அக்கம் பக்கத்தோர்கள் கக்கலிகொட்டியே
மிக்க நகைக்கின் ருரே உனக்குநான்
தக்கதல்ல என் ருரேகொஞ்சம்
பூந்தி கொடுத்தாயா அல்வா ஜிலேபி கொடுத்தாயா
துணடுமூருக்கு கொடுத்தாயா கடலேஅவுலு கொடுத்தாயா
ஒரு கோவிலுக்குப் போனயா அல்லது
குளத்துக்கு போனயா இந்த
கூறுகெட்ட மடையனுக்கு கொடுத்தேனே கழுத்து
எருவிழும் எனன்வாழ்வு எனக்கு எதற்கு அடே கை

இராமலிங்க சுவாமிகள் திருவருட்பா.

பல்லவி.

66 ஒருமையுட னினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்த முறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவா
ருறவுகல வாமை வேண்டும்

பெருமைபெரு நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான
பேய்பிடியா திருக்க வேண்டும்
மருவுபெண் ணாசையை மறக்கவேண்டுமுனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வினான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையிற் கந்தகோட்டத் துள்வளர்
தலமோங்குங் கந்த வேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே.

குகதாஸர் கீர்த்தனை

இராகம்-சங்கராபரணம் தாளம்-ரூபகம்

பல்லவி

67 முத்துக்குமரையப்பனே பக்தர்க்கருள் மெய்ப்பனே மு

அநுபல்லவி

சித்தமன்புசெய் குறத்திபத்தியோ டிணித்து வாழும் நாதனே
உத்தமர் மனத்தில் வாழும் பாத போதா மு

சரணம்

காலகாலனருள் வால தீனபரி பாலா ஸ்ரீலா லோலா
மூலா கருணாலவாலா வேலா கோலா மு
கீர்த்திமேவும் வேளூர்த்தலத்திலருள் மூர்த்தியான தூய
தேவர் சிறை தீர்த்த கார்த்திகேய நேயா மு
சஞ்சலந்தவிர அஞ்சலென்றருள்செய் தஞ்சம்யேம்மானே
உன்னையே நெஞ்சில் வாழ்த்தினேனே. நானே மு
ஆசையோடுகுக தாஸன் வாழ்த்துமுருகேஸ ராஸ்ஸாக
அன்பர் விஸ்வ வாஸ ஸுப்ர காஸா கேசே மு

M. N முத்துக் குமாரசாமி பாவலர் பாடியது.

நம்பிக்கை கோண்டெல்லோரும் என்ற மெட்டு.

பல்லவி

68 கலியுக வரதக் காந்திமகானைக்
கண்டால் கலிதீரும்
கண்டால் கலிதீரும் நாமம்
விண்டால் வினை போகும் கலி

அநுபல்லவி

சலியா மனத்துடை தீரன்
சாத்வீக கோதண்டமாரன் புவி
தனிலிவரொருவர பிரசாதக் குருஜன நாயகத் தெய்வம் கலி

தொகையறு

சுந்தர மிழந்த இவ் விந்தியர் சுகம் பெற
துணிந்து பலதியாகம் செய்தார்
"சுயராஜ்யமே நமது பிறப்புரிமை" என்னும் மொழியை
சொல்லியே வழிகாட்டினர் கலி

பாட்டு எடுப்பு

பல உலகினர் தினம் தொழும் கலைபுணர் வீரக்
கருணாகர மூர்த்தி
கருணாகர மூர்த்தி—பாவலர்
குருவாய் புகழ் கீர்த்தி கலி

V. R. ஏழுமலைப்பிள்ளை பாடியது.

சுருளிமலைமீதுமேவும் சீலா என்றமெட்டு

69 ஆறுமுகனின் பெருமை தானே அதை
ஆவலாயுந்தனுக்குரைப் பேனே அவர்
அண்டிவந்த பக்தர்துயர் தன்னையேதவிர்க்கும் வடி
வேலன் உமை பாலன் ஆ

நான்முகனைக்குட்டிசிறை யடைத்தார் இந்த
நானிலம்துதிக்கஜெயம் தொடுத்தார் வெகு
நாட்டமுடன் தந்தையர்க்கு நீட்டபாக மந்திரத்தை
யுரைத்தார் மணம் கரைத்தார் ஆ

சூரபத்மனுவிதனைப் போக்கி அவனை
ஜோபிதமுடையமயி லாக்கி அதில்
சூதயின்றி தானமர்ந்து நீதியாய் கழுகுமலை
வாழ்வோன் பக்தர் சூழ்வோன் ஆ

சரவணப்பொய்கைதனில் பிறந்தார் பொல்லா
சத்துருக்களை ஜெயித்து சிறந்தார் மகா
சஜ்ஜனர்கள் நித்தம்நித்தம் பொற்பதத்தைதான் பணிவார்
பாடி சதா கோடி ஆ

சண்முகன் தனக்குயிணை யேது அதை
சாற்றிடவும் நம்மாலே யாகாது அரை
சந்ததமும் ஏழுமலை சிந்தையில் துதித்தான் கவி
தோது புவி மீது ஆ

Printed at the Sundaram Press, Madras.

பெத்தான் சாம்பன்

சரித்திரக் கீர்த்தனை

சிதம்பரத்தின் கண் அனவரதமும் தாண்டவம் புரியும் நடராஜ மூர்த்தியைத் தரிசித்து உத்தம சாயுச்ய பதவி யடைந்த "நந்தனர், தில்லை வெட்டியான், பெத்லான் சாம்பன்" ஆகிய மூன்று பக்தர்களில் நந்தனர் சரித்திரத்தைப் போலவே, கதாகாலக்ஷேபங்கட் குதவுமாறு, இப்போது பெத்தான் சாம்பன் சரித்திரத்தையும் நூதன பல இராகதாளங்களில் அச்சிட்டிருக்கின்றனம் இதன்விலை அணு 12.

புதிய நாவல்! புதிய நாவல்!!

ஞானம்பாள் அல்லது

கற்புள்ள தாசிப் பெண்

இக்கதையில் கதாநாயகியாகிய ஞானம்பாள் தாசிக்குலத் திற் பிறந்தும், கற்பின் பெருமையை யுணர்ந்து தன் குலத் தொழிலை வெறுத்து ஒரு புருடனை மணஞ்செய்து கொண்டு குலமகளொழுக்கத்தைப் பின்பற்ற எண்ணுவதும், அதைத் தடுத்துத் தாசித்தொழிலுக் குட்படும்படி தாசிகள் தந்திரம் புரிவதும் முடிவில் எதுவும் பயனடையாமல் ஒருவனை மணம் புரிந்து மங்களமாக வாழ்தலும் வாசிக்க வாசிக்கப் பரமானந்தமாக விருக்கும். இதன் விலை அணு. 5

இதுவரை வெளிவராத புதிய துப்பறியும் நாவல்!

சத்தியகலா அல்லது சர்ப்பம்

E. A. வேங்கடலக்ஷிமிபாய் எழுதியது.

இந்நாவல் வாசிப்பதற்கு மிகவும் அருமையாகவும், தெளிவாகவும், திடிக்கிடும்படியான தீரச்செயல்கள் நிறைந்த அபூர்வ நாவல். இதன் விலை ரூ. 1—4—0 தான்.

எமது புத்தகஷாப்பில் பலவிதநாவல்கள், புராணம், இதிகாசம், முதலியவைகளும், பள்ளிக்கூடங்கட்கு வேண்டிய எல்லாவிதமான இங்கிலீஷ், தமிழ் புஸ்தகங்களும் ஷ்டேஷனரி சாமான்களும் விலை சாசமாய் கிடைக்கும்.

எமது விலாசம்:—

C. G. இராமானுஜம் செட்டியார்.

புத்தக வியாபாரம், சிதம்பரம்.